RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1318

OPEN ACCESS

# சங்க கால இலக்கியங்களில் வைணவ சமய வழிபாட்டுக் கோட்பாடுகள்

பி. நட்சத்திரவாணி [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620017, தமிழ்நாடு, இந்தியா

# Principles of Vaishnavism in Sangam Literature

P. Natchathiravani [a, *]

[a] Department of Tamil, Bishop Heber College, Tiruchirappalli-620017, Tamil Nadu, India

* Corresponding Author: namunavan@gmail.com

Received: 30-05-2022
Revised: 30-08-2022
Accepted: 19-09-2022
Published: 21-11-2022

## ABSTRACT

The Sangam literature is divided into two types: song and sum. From the Sangam literature to the epic period, there are references to Thirumal. There are also pieces of information about Krishna, Balarama, and Rama, the incarnations of Tirumal. In this article, the knowledge of the worship of Thirumal is found within the Sangam literature. The glory of Thirumal and the reference messages of Thirumal are described in detail in the Tolkappiyam, the grammar book of Tolkappiyar, and in the Sangam texts Akananuru and Purananooru. It is known that the Pandya kings of the Sangam age of Tamil Nadu developed Tamil from south Madurai, Kapadapuram, and Madurai through the three-sangams. It is said that South Madurai and Kapadapuram were destroyed by the sea, and the Kadai Sangam was established in present-day Madurai. It is evident that it operated from the 1st century to the 3rd century, and the Pandya kings developed Tamil through this society. The books of the Kadai Sangam are called songs and thokai.

**Keywords:** Sangam Literature, Vaishnavism, Thirumal, Worship, Thokai

## முன்னுரை

சங்க இலக்கியம் பாட்டும், தொகையும் என இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. சங்க இலக்கியம் தொடங்கி காப்பிய காலம் வரை திருமாலைப் பற்றிய குறிப்புகள் அமைந்துள்ளன. திருமாலின் அவதாரங்களாகிய கிருஷ்ணர், பலராமர், இராமர் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. திருமால் வழிபாடு பற்றிய செய்திகளை சங்க இலக்கியங்கள் புலப்படுத்தும் பெற்றிமையும் திருமால் வழிபாடும் குறித்து இக்கட்டுரையில் ஆராயப்பெறுகின்றது.

தொல்காப்பியர் இலக்கண நூலான தொல்காப்பியம் மற்றும் சங்க நூல்களான அகநானூறு, புறநானூறு ஆகியவற்றில் திருமாலின் பெருமையும், திருமாலின் குறிப்பு செய்திகளும் விரிவாகக் கூறப்படுகிறது. சங்ககாலத் தமிழகத்தில் பாண்டிய மன்னர்கள் தென் மதுரை, கபாடபுரம், மதுரை ஆகிய இடங்களிலிருந்து முச்சங்கங்களின் மூலமாகத் தமிழை வளர்த்ததாக அறியப்படுகிறது. கடற்கோளினால் தென்மதுரையும், கபாடபுரமும் அழிந்ததாகவும், கடைச்சங்கம் தற்போதுள்ள மதுரையில் கி.பி. முதலாம் நூற்றாண்டு முதல் மூன்றாம் நூற்றாண்டு வரை செயல்பட்டதாகவும், பாண்டிய மன்னர்கள் தமிழை இச்சங்கத்தின் மூலம் வளத்தனர் என்பது தெரிகிறது. கடைச்சங்க நூல்களைப் பாட்டும் - தொகையும் என்று கூறுவர்.

## சங்க நூல்கள்

எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் சங்க இலக்கியங்களில் பாட்டும், தொகையும் என இரண்டு

வகையாகப் பிரிக்கப்படுகிறது.

## எட்டுத்தொகை

"நற்றினை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு

ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்

கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு அகம் புறம் என

இத்திறத்த எட்டுத்தொகை"

இந்நூல்கள், அகம், புறம் என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது. இதில் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு போன்றவை அகப்பொருள் பற்றியது. புறநானூறு பதிற்றுப்பத்து புறப்பொருள் பற்றியது. பரிபாடல் அகம், புறம் என இரண்டையும் உள்ளடக்கியது. அதுமட்டும் இன்றி தமிழகத்தின் பண்டைய வரலாறு, அரசியல், சமூக அமைப்பு, போர்கொடை சிறப்பு ஆகியவற்றை உள்ளடக்கியப் புறப்பொருள் நூல் புறநானூறு என்பர். தமிழர் வாழ்வு முழுவதும் வீரமும் அதன் பொருட்டு அமைந்த அறமும் மேலோங்கி இருந்த காலமாகும். சங்க காலத்தில் வைணவம் வேரூன்றிய காலமாக இருந்தது (Thodhaadhri, 2010).

## பத்துப்பாட்டு

"முருகு பொருநாறுபாணிரண்டு முல்லை

பெருகுவள மதுரைக்காஞ்சி - மருவினிய

கோல நெடுநல் வாடை கோல் குறிஞ்சிப் பட்டினப்

பாலை கடாத்தொடும் பத்து"

இவ்வரிகளில் பத்து நூல்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் ஐந்து ஆற்றுப்படை நூல்களாகும். இந்நூல்களில் இறைவனை புகழ்ந்து பாடும் விதமாக அமைந்துள்ளது. வறுமையால் வாடியப் புலவர்கள் வள்ளலைக் கண்டு பரிசில் பெற்ற பின்னர் பரிசுப் பெறாத புலவர்களை ஆற்றுப்படுத்தும் உயரிய நிலையை ஆற்றுப்படை நூல்கள் காட்டுகின்றன என்பது புலனாகிறது (Thodhaadhri, 2010).

## பதினென்கீழ்க்கணக்கு நூல்கள்

பதினென் கீழ்க்கணக்கு நூல்கள் நீதி இலக்கியங்களாகும். இதனை அற இலக்கியங்களாகவும் கூறுவர்.

"நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணைமுப்

பால்கடுகங் கோவை பழமொழி - மாமூலம்

இன்னிலை காஞ்சியுடனேலாதி யென்பவே

கைந்நிலையோ டாங்கீழக் கணக்கு"

என்பன பதினென்கீழ்க்கணக்கு நூல் தொகைகளைக் காணலாம்.

இந்தச் சங்ககால நூல்கள் அனைத்திலும் வைணவ சமயம் இருந்தன என்பதனை இந்நூல்கள் சான்றாக விளங்குகிறது (Tamizhannal, 2009).

## சிலப்பதிகாரம்

இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட காப்பியம், சிலம்பு மூன்று அறங்களைக் கொண்டுக் காப்பியமாகக அமைக்கப்பட்டுள்ளது.

“அரசியல் பிழைந்தோர்க்கு அறங்கூற்று ஆவதூம்

உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தனும்

ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும் என்பதூஉம்”

இவ்வாறு அறத்தைப் பற்றி கூறுகிறது (Tamizhannal, 2009).

## மணிமேகலை

சீத்தலைச்சாத்தனார் மானுட அறநிலையை எடுத்து இயம்புகிறார்.

“அறம் எனப்படுவது யாதெனக் கேட்டின்

மறவாது இதுகேள் மன்னுயிர்க்கு எல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது கண்டதில்”

எனவும்,

“மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”

என்று அறம் பற்றி கூறியுள்ளார். இவ்வாறு அனைத்து நூல்களுமே அறத்தை மையமாக வைத்து கூறுகிறது. இவைகள் நீதி இலக்கியமாகவும் கொள்ளப்பெறுகின்றன (Tamizhannal, 2009). தொல்காப்பியரின் சிந்தனையும் அறநலைப்பட்டதே இதனை,

“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில்”

அன்பின் ஐந்தினையினுள் வாழும் மக்கள் அறத்தொடு பொருள் ஈட்டி இன்பமாய் வாழ வேண்டும் என்று தொல்காப்பியர் அறவழியை வகுத்துக் கூறியுள்ளார் (Tamizhannal, 2009). இறைவனையும் இரண்டற கலந்து, இச்சங்க நூல்கள் அனைத்திலும் திருமால் வழிபாடு எவ்வாறு பேசப்படுகிறது என்பதனை இவ்வாய்வுக் கட்டுரையின் வாயிலாகக அறியலாம். மேலும்,

தொல்காப்பியர் கலித்தொகை கலிப்பாவால் அமைந்தது. கலிப்பாவும், பரிபாடல் என்னும் பாவும் அகம் பொருள் பற்றி பாட ஏற்றப் பாவாகை என்கிறது,

“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலனெறி வழக்கம்

கலியே பரிபாட்டு ஆயிரு பாங்கினும்

உரியதாகும் என்மனார் புலவர்”

என்றும், மனிதனின் வாழ்க்கைக்கு இலக்கணம் கண்டது பொருளதிகாரம். வாழ்வை உணர்த்தும் உயரிய இலக்கண நூலாகத் திகழ்கிறது தொல்காப்பியம் (Tamizhannal, 2009).

மனித வாழ்வை அகம், புறம் என இரண்டாப் பகுத்து அகம் என்பது அகத்திணை என்றும், புறம் என்பது புறத்திணை என்றும் தொல்காப்பியம் விளக்கம் அளிக்கிறது எனலாம். செவ்வியல் இலக்கியத்தையும் இயற்றி உலக மக்களிடம் பெருமை பெற்றவர் தொல்காப்பியர் எனலாம்.

## சங்க இலக்கியங்களில் திருமால்

சங்க காலத்தினை காலத்தால் முற்பட்ட தகவல்களும் உண்டு. காலத்தால் பிற்பட்ட தகவல்களும் உண்டு. சங்க பாடல்களில் இடம்பெறும் குறிப்புகளை மனதில் கொண்டு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் சூத்திரத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

“மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன்மேய பெருமணல் உலகமும்

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலெனச்

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே”

என்று நால்வகை நிலங்களும், அவற்றிற்குரிய தலைமைத் தெய்வங்களையும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார் நம்பிக்கை சார்ந்த சிறு தெய்வங்களும் இருந்தன என்றார் (Tamizhannal, 2009).

சங்க காலத் தெய்வங்களாக அணங்கு குறிப்பிடப்படுகிறது. அணங்கு உறையும் இடங்களாக மகளிர் மார்பு, இல், நிலை, யாழ், கடம்பமரம், யானைமத்தகம், யானைத் தந்தத்தால் செய்த கட்டில், ஊருணித்துறை, நீராடும் துறை, கடல்துறை, கடல்பரப்பு. சுறாமீனின் கொம்பு ஆகியன குறிப்பிடப்படுகின்றன. கொற்றவை, அயிரை, காடுகிழான் என்ற தெய்வங்களும் குறிப்பிடப்படுகிறது.

## தெய்வங்கள் உறையும் இடம்

சங்க காலத் தெய்வங்கள் உறையும் இடங்களாக இல், பொற்றாமைரைக் குகுளம், பாறை, குவளைப்பூ, தாமரைப்பூ, மரம் மாமரம், ஆலமரம், பனைமரம், வேங்கைமரம் முரசு, நடுகல் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த தெய்வங்களில் ஒன்றாக இருந்து பின்னர் நால்வகைக நிலங்களுக்குத் தலைமைத் தெய்வமாக மாயோன், சேயோன், வேந்தன் (இந்திரன்) வருணன் ஆகியோர் உயர்ந்திருக்கக்கூடும். எனவே இப்பெருந் தெய்வங்களை மக்களின் தெய்வங்களாகக் கருத இடமுண்டு என்கிறார் (Thodhaadhri, 2010).

## திருமால் பற்றிய குறிப்புகள் (சங்க இலக்கிய நூல்கள்)

பாலைக்கலியில் (26), “ஒரு குழை ஒருவன் போல் இணர் சேர்ந்த மரஅடும்” பலராமனைக் குறிக்கும். பலதேவன் வெண்கடம்பு மரத்திற்கு ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளான். கடம்பு கடவுள் உறையும் மரங்களில் ஒன்றாகும்.

“கொடுமிடல் நாஞ்சிலான் தார்போல் மராத்து”

பலராமன் தோளில் உள்ள துளசி மாலைக்கு வெண்கடம்பு மீது உள்ள மயில்களை ஒப்பிடப்படுகின்றன (Thodhaadhri, 2010).

குறிஞ்சிக்கலி (35) இராவணனை

“இருதலைவியின் அரக்கர் கோமான்” என்று குறிப்புள்ளது.

“மல்லரை மதம் சாய்த்த மால்போல்”

என்பதில் திருமால் பற்றிய குறிப்புள்ளது (Thodhaadhri, 2010).

“தையில் நீர் ஆடிய வெம் தலைப்பருவாயோ?”

என்பது இடம்பெறுகிறது (Thodhaadhri, 2010). பலராமனைக் குறிப்பதாக,

“பால்நிற வெள்ளை எடுத்துப் பாய்ந்தாளை”

என்ற அடியும் மயோனைக் குறிப்பதாகவும்,

“பால்மதி சேர்ந்த அரவினைக் கோள்விடுக்கும்

நீல நிற வண்ணமும் போன்ற", கலி 105 வது பாடலில்

"வள் உருண் நேமியான்"

"ஒரு குழையவன் மார்பில் ஒன்தார்போல்

ஒளி மிகல்" என்ற பகுதிகள் திருமாலைக் குறிப்பதாக உள்ளன (Thodhaadhri, 2010).

"மலையோடு மார்பு அமைந்த செல்வன்

அடியைத் தலையினால் தொட்டு உற்றேன்"

"இகல் மிகு நேமியான் நிறம் போல் இருள் இவர்

என்று திருமால் குறிப்பிடப்படுகிறார் (Thodhaadhri, 2010).

"அருள் பொருள் மரபின் மால்யாழ் கோளாக் கிடத்தான் போல்"

என்ற அடிகளில் திருமால் யாழிசை கேட்டுப் பள்ளி கொண்டிருந்தது குறிக்கப்பட்டுள்ளது (Thodhaadhri, 2010).

"ஞாலம் மூன்று அடித்தாய முதல்வதற்கு முதுமறைப் பால் அன்னமேனியான்"

இவ்வடிகளால் திருமால் உலகளந்ததும், பலராமன் அவனுக்கு மூத்தவன் என்பதும் இங்குக் கூறப்பட்டுள்ளது (Thodhaadhri, 2010).

"செருமிக்க நேமியோன் தார்போல"

"மல்லரை மறம் சாய்த்த மலர்த்தண்தார் அகலத்தோன்"

இவை அனைத்து வரிகளும் திருமாலைக் குறிப்பதாக உள்ளது (Thodhaadhri, 2010). அதனால் இவ்வரிகள் அனைத்தும் மேண்மை பொருந்திய திருமாலைக் குறிப்பவை எனலாம்.

"மாயோன் அன்ன மால் வரைக் கவர்அன்

வாலியோன் அன்னவயங்கு வெள் அருவி"

இவ்வரிகள் நற்றிணையில் கடவுள் வாழ்த்து திருமாலைக் குறிப்பதாக உள்ளன (Thodhaadhri, 2010).

களிற்று யானை நிரை (13) யில்,

"திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்"

என்று அழைக்கிறார். இலக்குமி விரும்பும் மார்பினை உடையவன் என்று கூறுகிறார் (Thodhaadhri, 2010).

"மரம் செல மிதித்த மாஅல் போல்"

இவ்வரியில் கண்ணன் மராமரத்தினைச் சாய்த்த நிகழ்ச்சி இங்கு இடம்பெறுகிறது (Thodhaadhri, 2010).

"முந்நீர் விழாவின் நெடியோன் நல்ரீரச் பஃதுளி மணிலினும் பலவே"

இவ்அடியில், கடலின் தெய்வத்திற்கு விழா எடுத்தவனும், பஃறுளி ஆற்றை உருவாக்கியவனும் ஆன நெடியோன் என்று திருமால் குறிப்பிடப்படுகிறான் (Thodhaadhri, 2010).

"இனிது உருண்ட சுடர்நேமி முழுது ஆண்டோர் வழிகாவல"

"புகழ்த்தல் கற்றோர்கக்கு மாயோன் அன்ன"

"பால்நிற உருவின் பனைக் கொடியோனும்

நீர் நிற உருவின் நேமியோனும்"

"அஞ்சன உருவன் ஏந்து நிறுத்தாங்கு"

என்று இவ்அடிகளில் திருமாலின் மேன்மையை மேன்மேலும் மிளிர புறநானுஸற்று பாடல்களின் வரிகள் மிக அழகாக திருமாலின் குறிப்புகளை தெளிவுற விளக்குகிறது (அ) தருகிறது எனலாம் (Thodhaadhri, 2010).

திருவனந்தபுரம் கோயில் பற்றிய குறிப்பு உள்ளது. அகநானூற்றில் பரசுராமன் கதை உள்ளது. (59) திருவரங்கத்தில் நடைபெறும் பங்குனி உத்திரத் திருவிழா பற்றிய செய்த அகம்137 வது பாடலில் உள்ளது எனலாம்.

## பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் திருமாலின் குறிப்பு

சங்கம் மருவிய நூல்களாகக் கரதப்படும் கீழ்க்கணக்கு நூல்களிலும் திருமால் பற்றிய குறிப்புகள் உள்ளன என்பதை,

நான்மணிக்கடியில்,

"மதி மன்னு மாயவன் வான்முகம் ஒக்கும்

கதிர் சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்

துநீர்ப் பழனத்துத் தாமரைத்தாலின் எதிர்

மலர் மன்றவன் துண் ஒக்கும் பூவைப்பூ

புதுமலர் ஒக்கும் நிறம்"

என்று திருமால் பற்றிய குறிப்புள்ளது (Thodhaadhri, 2010).

திரிகடுகத்தில், கண்ணனது லீலைகளைக் கூறுகிறது இப்பாடல்

"கண்ணன் ஞாலம் அளந்தஉம் காடு சீர்த்

தண்ணுறும் பூங்குடுதம் சாய்த்தஉம் - நண்ணிய

மானச் சாடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்

பூவைப்பூ வண்ணன் அடி"

என்று கூறப்படுகிறது.

கார்நாற்பதில், "பெருங்கடல் வண்ணன் புணைமார்பின் தார்போல"

என்று குறிப்பிடப்பட்டுள்ளது (Devaraj, 2010).

இனியவை நாற்பதில், திருமாலை பற்றிய குறிப்பில்

"தொல்மாண் துழாய்மாலை யானைத்தொழுதல் இனிதே"

என்று கூறப்பட்டுள்ளது.

ஐந்திணை ஐம்பதில் திருமாலை, "மல்லர்க்கிடந்தான் நிறம் போன்று"

என்று கூறப்படுகிறது (Devaraj, 2010).

## சிலப்பதிகாரத்தில் திருமால்

திருமால் முல்லை நிலத்திற்குரிய கடவுளான காரணத்தால், முதல் முதலில் தமிழ் நாட்டில் 'காடும் காட்டைச் சேர்ந்த' முல்லை நிலப்பகுதிகளிலேயே திருமால் வழிபாடு நடைபெற்றிருக்கக் கூடும் எனலாம். முல்லை நிலத்திற்குரிய மக்களைத் தொல்காப்பியர் 'ஆயர்' என்றே குறிப்பிட்டுள்ளார். ஆகவே

அவ்ஆயர் குலத்துதித்த மாயவனே முல்லை நிலத்துக்குரிய கடவுளாக வழிபடப்பட்டது. இதே கருத்தையே இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்தில் வரும் ஆய்ச்சியர் குரவையில் கீழ்வருமாறு கூறுகின்றார் என்பது தே.ந.ச. தேவராஜன் கூற்றாகும்.

"ஆயர்பாடியி லெருமன்றத்து மாயவனுடன் நம்முனாடிய

வாலசரிதை நாடகங்களில் வேனெடுங்கம் பிஞ்ஞையே

டாடிய குரவையாடுதும் யாமென்றாள் கறவைகன்று

துயர்நீங்குக வெளவே"

இவ்வரியில், முல்லை நில மக்கள் பின்பற்றிய திருமால் வழிபாடு தொல்காப்பியர் காலத்தில் மற்றைய நிலத்துக் கடவுள் வழிபாட்டினும் சிறந்திருந்தது என்பதை அறிய முடிகிறது (Devaraj, 2010).

மாயோன் என்ற சொல்லுக்கு கரியோன் கருமையானவன் என்று பொருள். மாயோன் என்ற வார்த்தைக்கு 'மால்' என்றும் பொருள்படும். 'மால்' என்பது கருப்பு, மேகம், வானம், கரியோன் ஆகியவற்றைக் குறிக்கப் பயன்படுத்தும் சொல். ஆயர்களின் தெய்வமாகக 'மாவலன் கருமை நிறம் கொண்டவன்' என்றும் முடிவு செய்தனர். தாங்கள் வழிபட்டு வணங்கும் திருமாலாகவே பாவித்தனர் என்பது உறுதிப்படுகிறது.

## மணிமேகலையில் திருமால்

"காதல் கொண்டு கடல் வண்ணன் புராணம் ஓதினன் நாரணன் காப்பென்று உரைந்தனன்" என்று திருமாலைப் பற்றிய செய்தி இடம்பெறுகிறது.

## சீவகசிந்தாமணியில் திருமால்

நாமமகள் இலம்பகத்தில், கண்ணன் வளர்ந்த கதையும், (180) நப்பின்னையை மணந்த நிகழ்ச்சியும் (333) இடம்பெறுகிறது. கோவிந்தயார் இலம்பகத்தில், இராமன் மராமரம் எய்தது (74-iv) குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலக்கியங்களில் திருமால் தலம் (அ) கோயில்

தமிழகத்தில் திருமால் திருத்தலங்களான திருமாலிஞ்சோலை, திருவரங்கம், திருவேங்கடம், கச்சித் திருவெஃகா ஆகியவை மக்களால் மிகவும் அறியப்பட்டதாகத் தெரிய வருகிறது.

பரிபாடல், சிலப்பதிகாரம், பெரும்பாணூற்றுப்படை, அகநானூறு, புறநானூறு, மணிமேகலை ஆகிய தமிழ் இலக்கியங்களில் இதுபற்றிப் பேசப்படுகிறது.

## திருமாலிஞ்சோலையில் திருமால்

இளம் பெருவழுதியார் என்ற புலவர் பரிப்பாடலில்

"நலம்புரீ இயஞ்சீர் நாம் வாய்மொழி

இதுவென வுரைத்தான் முன்னமர்ந் திசைத்திறை

இருங்குன்றத் தடியுரை யியைதெனப்

பெரும் பெயரிநிவரைப் பரவுதுந் தொழுதே"

என்று கூறுகிறார் (Devaraj, 2010).

## திருவரங்கத்தில் திருமால்

"விரிதரைக் காவிரி வியன் பெருந்துருத்தித்

திருவயர் மார்பன் கிடந்த வண்ணமும்"

என்று திருவரங்கத்தைப் பற்றி இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடுகிறார் (Devaraj, 2010).

## திருவேங்கடத்தில் திருமால்

இளங்கோவடிகள் வாழ்ந்த காலத்தில் திருவேங்கடம், 'நெடியோன் குன்றம்', 'வேங்கடமலை' என்ற பெயர்களால் அழைக்கப்பட்டு வந்தது என்பதை கீழ்வரும் பாடல் வரிகளின் மூலம் தெரிய வருகிறது.

"வீங்கு நீர் அருவி வேங்கடம்"

"நெடியோன் குன்றமும் நெடியோன் பௌவமும்"

"வேங்கட மலையும் தாங்கா விளையுள்

காவிரிநாடும்" என்று குறிப்பிடுகிறார்.

கச்சித் திருவெஃகாவில் திருமால்

"நீடுகுலைக்

காந்தளஞ் சிலம்பிற் களிறு படித்தாங்குப்

பாம்பனைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண்"

என்ற வரியில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையில் கூறுகிறார் (Devaraj, 2010).

## திருமால் அவதாரம் பற்றிய குறிப்புகள்

பண்டைய இலக்கியங்களில், திருமாலின் அவதாரங்களைப் பற்றிய சிறப்பு பேசப்படுகிறது. இதில் கிருஷ்ணவாவதாரம், இராமாவதாரம் பற்றிய குறிப்புகள் உள்ளன. இராமாயணம் பற்றிய குறிப்பு புறநானூற்றிலும் அகநானூற்றிலும் இடம்பெறுகிறது.

சீதை கீழே வீசிய அணிகலன்களைக் குரங்குகள் தாறுமாறாக அணிந்த கொண்டதைப் பின்வரும் பாடல் காட்டுகிறது.

"கடுந்தே ரிராமனுடன் புணர்சீதையை

வலித் தொகை அரக்கன் வௌவிய ஞான்றை

நிலஞ்சேர் மதரணி கண்டகுரங்கின்

செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந்தா அங்கு

அறாஅ அருநகை இனிது பெற்றிடுமே"

என்று குரங்குகு கூட்டங்கள் தவறாகக நகைகளை அணிந்து அதன் மூலம் நகைப்பை உண்டாக்கிய செய்திகள் காணப்படுகிறது (Devaraj, 2010). இலங்கையில் சீதையை மீட்க, ஆலமரத்தின் கீழ், படையெடுப்பதைக் குறித்து ஆலோசனை செய்தபோது, பறவைகள் ஒலியெழுப்பியதாம். இராமன் பறவைகளை ஒலி எழுப்பாமல் செய்த நிகழ்ச்சியைப் பின்வரும் பாடல் கூறுகிறது.

"வெண்வேண் கவுரியர் தொன்முது கோடி

முழங்கிவரும் பௌவ மிரங்கு முன்றுறை

வெல்போ ரிராமன் அருமறைக் கனித்த

வல் வீழ் ஆலம் போல

ஒலிய விந் தன்று"

என்று கூறுகிறது (Devaraj, 2010).

பரசுராமமைரப் பற்றிய குறிப்பு ஒன்று அகம் பாடலில் காணப்படுகிறது.

"மன்மறுங் கறுத்த மழுவாள் நெடியோன்

முன்முயன் நரிதினின் முடிந்த வேள்விக்

கயிறறை யாத்த காண்டகு வனப்பின்

அருங்கடி நெடுந்தூண் போல"

இவ்வரிகளில், பரசுராமர் 24 தலைமுறை அரச குலத்தைக் கொன்று யாகம் செய்த போது அந்த யாகத்தில் நடப்பட்ட தூண் இங்கு உவமையாகக் கூறப்பட்டது (Devaraj, 2010).

## பரிபாடத்தில் வராக அவதாரம்

"வாயடை அமிர்தம் நின் மனத்தகத்து அடைத்தர்" என்ற வரிகளில் 'மோகினி அவதாரம' இடம் பெறுகிறது. "கீழ் ஏழ் உலகமும் உள்ள அடியினை" என்பதில் 'வாமன அவதாரம்' இடம்பெறுகிறது. "பிருங்கலாதன் பலபல பிணிபட" என்ற வரிகளில் 'நரசிம்மாவதாரம்' இடம்பெறுகிறது (Thodhaadhri, 2010).

பரிபாடல் மற்ற சங்கப் பாடல்களில் இருந்து வேறுபட்டு தத்துவமும் பேசுகிறது. திருமாலை எல்லாவற்றிலும் இருப்பவனாகக் காண்கிறது. பரிபாடல் மூன்றாவது பாடலில் உள்ள வரிகள் சாமவேதம் கூறும் பொரளில் திருமால் பற்றிய குறிப்பு இடம்பெறுகிறது (Thodhaadhri, 2010). "அனைத்தும் நீ: அனைத்தின் உட்பொருளும் நீ ஆதலில் உறையும் உறைவதும் இலையே" என்ற வரிகளில், பக்தி மார்க்கத்திற்கான் விதைகளைப் பரிபாடலில் காணமுடிகிறது (Thodhaadhri, 2010).

முதலாவது திருமால் ப்றறிய குறிப்புகள் மக்களின் தெய்வமாகக இருந்த நிலை காணப்படுகிறது சங்க காலத்தில் எனலாம். இரண்டாவதாக விஷ்ணுவுடன் திருமால் இணைக்கப்பட்ட பிந்திய காலநிலை 'மாயோன்' என்றும் பலதேவன் என்றும் குறிப்பிடப்படுவது 'பரிபாடல்' காலத்தில் விஷ்ணுவின் அவதாரங்களுடன் இது இணைக்கப்பட்ட நிலையையும் காண முடிகிறது முந்திய கால நிலைகளில் எனலாம்.

திருமால் பற்றிய குறிப்புகள் பல இடங்களில் இருந்தாலும் திருமால் வழிபாடு தமிழகத்தில் வேரூன்றியது. ஆனால் பரிபாடல் காலகட்டத்தில் திருமால் வணங்கும் முல்லை நிலத்தின் கடவுளான மாயோனுடன் இணைந்து அதன் மரபின் தன்மைகளைக் கொண்டதாகக விளங்கியது. வேதக் கருத்துக்களில் சுற்றத்தாரோடு வணங்குவதைக் பரிபாடல் முதல்பாட்டு கூறுகிறது.

"ஆங்குகாமரு சுற்றமொடு நின் அடியுரை

யாம் இயைந்து ஒன்றுபு வைகலும் பொலிக"

மேலும் பரிபாடல் கூறுவது, (2)

"கடும்பெடும் கடும்பொடும் பரவலும்"

உறவினர்களுடன் வந்து மறுபடியும் மறுபடியும் திருமாலை வணங்குவோம் என்று இங்குக் கூறப்படுகிறது. இது அழகர் கோயில் பற்றி எழுதிய கட்டுரையில் வைணவக் கோயில்களுக்கு உள்ளே நடைபெறும் ஆகம மரபுகளையும், வெளி மரபினையும் பற்றி விரிவாககக் கூறுகிறது (Thodhaadhri, 2010).

திருமாலின் தன்மையைப் பரிபாடல் 3 வது பாடல் கூறுவது,

"இடவல ஃ குடவல ஃ கோவல / காவல /

காணாமரப / நீயா நினைவ /

மாயாமன்ன / உலகு ஆள் மன்னவ

தொல் இயல் புலவ ஃநல்யாழ்ப்பாண /"

திருமாலிருஞ்சோலை பற்றிய பரிபாடலில் கோயிலுக்குச் செல்பவர் பற்றிய விரிவான செய்தி உள்ளது (Thodhaadhri, 2010).

"தையலவரொடும், தந்தாவரொடும்

கைம் மகவொடும், காதலரொடும்

தெய்வம் பேணித்திசை தொழதனிர் செய்மின்"

இவ்அடிகள் ஒரு கூட்டு வணக்கத்தின் தன்மையைக் கொண்டவையாக இருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. இவற்றை ஆழ்வார்கள் பாடல்களுடன் ஒப்பிடும்பொழுது தெளிவாகிறது. ஆழ்வார்கள் தனித்து நின்று பக்திப் பாடல்களைப் பாடி, மற்றவர்களை அதில் ஈடுபடச் செய்தனர். பரிபாடலில் சுற்றம்சூழச் சென்று திருமாலை வணங்குவது இடம்பெறுகிறது. பரிபாடல் முழுவதும் இசையோடு பாடிய பாடல்கள் என்றாலும் இங்குப் பக்தி மார்க்கம் என்பதன் தாக்கம் அதிகமாக இல்லாமல் இருப்பதைக் காண முடியும். பொதுவாகச் சங்க இலக்கியத்தில் உள்ள தெய்வ நம்பிக்கை என்பது பூர்வீகமான நம்பிக்கை சார்ந்த வணக்கமுறையை கொண்டதாகும். செவ்வேள், கொற்றவை, மாயோன் ஆகிய தெய்வங்கள் நம்பிக்கை சார்ந்து வணங்கும் முறையாகும் (Thodhaadhri, 2010). மாயோன், நெடியோன், திகரியோன், திருமால் என்று திருமாலை வழிபட்டவர்கள் சங்க இலக்கிய மக்கள் எனலாம்.

## முடிவுரை

சங்க கால வைணவம் விஷ்ணுவை பேருண்மையாகக் கொண்டு தகழும் சமயமாகும். வைணவ வழிபாட்டு மரபு விஷ்ணுவைப் பரம்பொருளாகக் கொண்டு, வைணவ மரபில் கோவிலுள்ள இறைவனைப் போற்றிப் பாடுதல் மங்களசாசனம் செய்தல் எனப்படும். இந்த வைணத்தை 'ஆன்ற தமிழ் மாலை' திராவிட சாகரம்' என வேறுபெயர்களும் உண்டு வைணவத்திற்கு, சங்க பாடல்களின் காலத்தால் சற்று பின்பட்டவற்றில் மாயோனை (திருமாலை) விஷ்ணுவுடன் இணைத்து, விஷ்ணுவிற்குரிய அவதாரங்களை திருமாலுக்கு ஏற்றிக் கூறுவதைகக் காண முடிகிறது 'பரிபாடல்' இதனைக் காட்டுகிறது. 'புறநானூறு'ன்றவற்றில் பாரதம் பற்றியும், இராமயணம் பற்றியும் குறிப்புகள் இடம் பெற்றிருந்தாலும், அவை அந்த இதிகாசக் கதைகளின் மூலம் தமிழகத்தில் பரவி காணப்பட்டது. எனவே சங்க இலக்கியம் குறிப்பிடும் திருமால் முல்லை நிலக் கடவுளாக இருந்து வளர்ச்சி பெற்று பிந்திய காலத்தில் தான் விஷ்ணுவுடன் இணைக்கப்படுகிறார். இதனால் திருமாலிடம் பேரன்பு கொண்டு பக்தி செலுத்தியதை சங்ககால நூல்கள், பரிபாடல் பாடல்களின் மூலமும் அறியலாம் என்பதனை இவ்வாய்வு கட்டுரையின் மூலம் அறியலாம். சங்க கால இலக்கியத்தில் பண்டைய கால மக்கள் அனைவரும் திருமாலின் திருவருள் பெற்று வாழ்ந்த வந்தனர் என்பதனையும், இதனைத்தான் வரலாற்றில் பக்தி இலக்கிய காலம் என்று அழைக்கிறார்கள் என்பதனை என் ஆய்வுக் கட்டுரையின் வாயிலாக உய்த்துணரலாம்.

## References

Devaraj, M. (2010) Vainavamum alwargalum, University of Madras, Chennai, India.

Tamizhannal, (2009) Tholkkapiyam, Koviloor Madalayam, Koviloor, India.

Thodhaadhri, S. (2010) Vainavam, Markasiyam Paarvai Printers, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License